# 1.3 அன்பான தேவப்பிதா

**வேத வசனம்:** பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. சங். 103:11

**அறிக்கை:** தேவனுக்குப் பயப்படுகிறவர்களிடத்தில் அவருடைய அன்பு பெரிதாயிருக்கும்

**சத்தியம்:** தேவனாகிய கர்த்தர் இரக்கமும் மிகுந்த கிருபையும் உள்ளவர். அவருடைய மிகுந்த தயவினாலே மனிதனை உண்டாக்கினார். இதனால் நாம் அவருடைய குடும்பத்திலும் பின்பு நித்தியத்திலும் இணைகிறோம்.

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- *நாம் தவறு செய்தபின்னும் தேவன் நேசிக்கிறாரா?*
- *சங். 103:8-11 ன்படி ஒரு மனிதன் எவ்விதம் தேவனின் தயவுள்ள அன்பை அனுபவிக்க இயலும்?*
- *யோவான் 3:16 தேவனுடைய அன்பையும் இயல்பையும் எவ்விதம் காண்பிக்கிறது?*

## வேதப்பகுதி

*லூக்கா 15:11-24*

## பாடக்குறிப்புகள்

- **எப்போதும் மாறாத அன்பு** - *சங். 107:1*
- **மனிதனும் தன் சொந்த வழியில் நடக்கிறான்** - *ஏசாயா. 53:6*
- **பிதாவாகிய தேவனின் மகாபெரிய அன்பு** - *லூக்கா 15:11-24*
- **மனந்திரும்புதலும் தேவ பயமும்** - *சங். 51:17, 33:18*
- **பெற்றோரற்றவருக்குத் தேவனுடைய அன்பு** - *சங். 68:5*

## செயல்

**நீ தவறு இழைத்த ஒருவரிடம் சென்று மன்னிப்புக் கேட்டுத் தவறுகளைச் சரி செய்.**

## தேவனுக்காக உன் அன்பான வாழ்வு

*சரியானவைகளைச் செய்வது பல வேளைகளில் கடினமானக் காரியம். போட்டிகளில் ஏமாற்றுவது, மதுபானம் குடிப்பது, கடமைகளைச் செய்யத் தவறுவது போன்றவைகளைச் செய்ய தூண்டப்படுகிறோம். பல வேளைகளில் பாவம் செய்வது எளிதாகத் தோன்றுகிறது. ஆனால் இச்சைகளை அடக்கவேண்டியது மிகவும் அவசியம். தேவன் நம்மை மிகவும் நேசிப்பதால் எப்போதும் நம்மை மன்னிக்கிறார். நாம் பிரயாசப்பட்டுச் சரியான பாதையில் செல்லுவதன் மூலம் நம்முடைய அன்பையும் நன்றியையும் அவருக்கு காட்டுகிறோம்.*

**சிந்திக்க:** *தேவன் எப்போதும் மன்னிப்பவர் என்பதால் நாம் மனந்திரும்புவதும் மன்னிப்புக் கேட்பதும் அவசியமா?*

______________________________

______________________________

**ஜெபம்:** *மனந்திரும்புதலின் ஜெபத்தை எழுது.*

______________________________

______________________________